**<u>தாம்பரம் மாநகராட்சி (மண்டலம்–II)</u>**
**<u>சென்னை – 600 044</u>**

மண்டல கூட்ட எண். 02/2022–23 நாள். 28.04.2022

## <u>அவசரக் கூட்ட அழைப்பு</u>

தாம்பரம் மா நகராட்சி, மண்டலம்–II-ன் மண்டலக்குழுவின் அவசரக் கூட்டம் மண்டலம்–II (பல்லவபுரம்) கூட்ட அரங்கில் 29.04.2022–ம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி அளவில் நடைபெறும். இக்கூட்டத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்க உள்ளதால் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மண்டல குழுத்தலைவர்,
தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–II

இணைப்பு –
மண்டல கூட்டப் பொருள்கள்.

பெறுநர் –
திரு / திருமதி ........................................................................ அவர்கள்,
மா மன்ற உறுப்பினர் (வார்டு– )
தாம்பரம் மாநகராட்சி.

**பொருள் எண். – 1**

தாம்பரம் மா நகராட்சி (பல்லவபுரம்) பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் கனரக வாகனம் எண் . TN22-DH-9511 என்ற வாகனத்திற்கு பழுதுகளை சரி செய்து தகுதி சான்று புதுபித்து தரும் பணிக்கு 27.04.2022 தேதியில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் , வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண். | பணியின் விவரம் | நிறுவனத்தின் பெயர் / தொகை | |
|---|---|---|---|
| | | M/s. SRI VENKATESWARA AUTO MOBILES, Kodugaiyur, Chennai-118. | M/s. SURIYA NARAYANA AUTO WORKS, Villivakkam, Chennai-49. |
| 1) | பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் கனரக வாகனம் எண்.TN22-DH-9511 என்ற வாகனத்தின் பழுதுகளை சரி செய்து , தகுதி சான்று பெறும் பணிக்கு. | ரூ. 1,94,200/- | ரூ. 1,97,900/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. SRI VENKATESWARA AUTO MOBILES, Kodugaiyur, Chennai-118 என்ற நிறுவனத்தின் விலைப்புள் ளினை ஏற்று பணி உத்திரவு வழங்க மண்டலகுழுவின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

1. பதிவு செய்யலாம்.
2. அதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண்: 817/2022/எச்1

**பொருள் எண். – 2**

தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் பகுதி பொது சுகாதாரப் பிரிவு தலைமை செயலர் சென்னை அவர்களின் 07.09.2021–ம் தேதிய கடிதத்தின் படி இந்நகராட்சி பகுதிகளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு தடுப்பூசி முகாம்கள் குறித்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. அதில் குரோம்பேட்டை பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி நடுநிலைப்பள்ளி கீழ்கட்டளை பகுதிகளில் 12.09.2021–ம் தேதிகளில் சிறப்பு தடுப்பூசி முகாம் அமைக்கப்பட்டது மேற்படி முகாமிற்க்கு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு –15 ன் கீழ் தேவையான அரேபியன் டென்ட், சாமியான பந்தல், நோயாளிகளுக்கு சலிப்பு ஏற்படாத வகையில் மைக் செட் மூலம் இசை அமைத்தல், டேபிள் சேர் , பொது மக்களுக்கு ஆட்டோ மூலம் 3 நாட்களுக்கு பகுதி முழுவதும் மைக்செட் விளம்பரம் செய்யப்பட்டு பொது மக்களுக்கு

தடுப்பூசி முகாம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி செய்தமைக்கான செலவினத் தொகை ரூ.60,880/- வழங்கியமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு-**

பதிவு செய்யலாம்

ந.க.எண். 6174/2021/எச்1

**பொருள் எண். – 3**

தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் பகுதி பொது சுகாதாரப் பிரிவு தலைமை செயலர் சென்னை அவர்களின் 07.09.2021-ம் தேதிய கடிதத்தின் படி இந்நகராட்சி பகுதிகளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டது. மேலும் 43 இடங்களில் தடுப்பூசி முகாம் சிறப்பாக நடத்தியமைக்கும் கீழ்காணும் விவரப்படி துண்டு பிரசுரங்கள், பேனர்கள், மற்றும் தட்டி பேனர்கள் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் பணி செய்தமைக்கான செலவினத்தொகை ரூ.1,78,496/- தொகை வழங்கியமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

| வ. எண் | பொருளின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 4“x3”Banner (Awarness Regarding Vaccination) | 55 |
| 2 | Banner 6“x4” With Stiffner Alloy Metal Angles | 2 |
| 3 | Banner 6“x4” Vaccination Spot Information With Stiffner Angles | 5 |
| 4 | Banner (Vaccination Applied) 6“x4” With Stiffner Angles | 2 |
| 5 | Multicolour Notice Out Of 130 GMS Double Side | 20000 |

**அலுவலகக்குறிப்பு-**

1. மன்றம் பதிவு செய்யலாம்
2. அதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்

ந.க.எண். 4345/2021/எச்1

மண்டல குழுத்தலைவர்,
தாம்பரம் மாநகராட்சி (மண்டலம்-II).

**பொருள் எண். – 4**

தாம்பரம் மாநகராட்சி, (பல்லாவரம் )பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் இலகு ரக வாகனம் ( LCV) **TN –11- AH – 5790** என்ற வாகனத்தின் பழுதுகளை சரி செய்து , தகுதி சான்று பெற அதற்கான தோராய செலவினத்தொகை ரூ. 0.75/–இலட்சத்திற்கு மண்டலகுழுவின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்:** 2266/2022/**எச்**1

**பொருள் எண். – 5**

தாம்பரம் மாநகராட்சி, (பல்லாவரம் )பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் இலகு ரக வாகனம் ( LCV) **TN –11- AH – 5747** என்ற வாகனத்தின் பழுதுகளை சரி செய்து , தகுதி சான்று பெற அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.0.75/–இலட்சத்திற்கு மண்டலகுழுவின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்:** 2267/2022/**எச்**1

**பொருள் எண். – 6**

தாம்பரம் மாநகராட்சி, (பல்லாவரம் )பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் இலகு ரக வாகனம் (LCV) **TN –11- E – 7178** என்ற வாகனத்தின் பழுதுகளை சரி செய்து , தகுதி சான்று பெற அதற்கான தோராய செலவினத்தொகை ரூ. 0.75/–இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்:** 1820/2022/**எச்**1

**பொருள் எண். – 7**

தாம்பரம் மாநகராட்சி பகுதியில் பல்லவபுரம் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினசரி சுமார் 110 முதல் 120 மெ,டன் குப்பைகள் சேகரமாகிறது. இதில் மக்கும் குப்பைகள் சுமார் 20 முதல் 25 டன் வரை பசுமை உரக்குடில் மூலம் உரமாக்கப்பட்டு பொது மக்களுக்கு , விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள சுமார் 100 மெ,டன் அளவு குப்பைகள் தினசரி கணபதிபுரம் குப்பை மாற்று நிலையத்தில் சேகரம் செய்யப்பட்டு அங்கிருந்து டாரஸ் வாகனங்கள் மூலம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திற்க்குட்ப்பட்ட

ஆப்பூர் திடக்கழவு கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது. டாரஸ் லாரி நடை ஒன்றிக்கு நுழைவு கட்டணம் ரூ.1000/– வீதம் ஆப்பூர் மையத்தில் கட்டணம் செலுத்தப்பட்டு குப்பைகள் கொண்டு செல்லப்பட்டு வருகிறது. கடந்த 20.12.2021 முதல் தாம்பரம மாநகராட்சி சிட்லப்பாக்கம் பகுதியில் சேகரமாகும் குப்பைகள் தினசரி சுமார் 10 மெ.டன் குப்பைகள் கணபதிபுரம குப்பை மாற்று நிலையத்தில் சேகரம் செய்யப்பட்டு அங்கிருந்து ஆப்பூர் திடக்கழிவு மேலாண்மை திட்ட மையத்திற்க்கு கொண்டு செல்லப்பட்டது.

எனவே தினசரி சுமார் 100 மெ.டன் முதல் 110 மெ.டன் குப்பைகள் வரை கணபதிபுரம் குப்பை மாற்று நிலையத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு சேகரம் செய்யப்பட்டு பல்லாவரம் ரேடியல் சாலையில் கணபதிபுரம் குப்பை மாற்று நிலையத்தில் மலைபோல் குப்பைகள் தேங்கி உள்ளது. குப்பைகளை தினசரி பொக்லைன் மூலம் குறுகிய இடத்தில் சேகரித்து சுமார் 50 முதுல் 60 அடி உயரத்திற்கு குப்பைகள் தேங்கியுள்ளது. இதனால் மீத்தேன் வாயு உற்பத்தியாகி தீ விபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளது. முக்கிய சாலையில் அமைந்துள்ள காரணத்தினால் பொது மக்களிடமிருந்து அப்புறப்படுத்த தொடர்ந்து கோரிக்கை வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் குப்பை சேகாரம் செய்யும் இடத்தினை உரிய மாற்று இடம் தேர்வு செய்து உடனடியாக மாற்ற தாம்பரம் மாநகராட்சி ஆய்வு கூட்டத்தல் அறிவுறுத்தப்பட்டது. பல்லாவரம் ரேடியல் சாலையில் கணபதிபுரம் குப்பை மாற்று நிலையத்தில் அடுக்கு மாடி குடியிருப்புகள் அதிக அளவில் தற்போது கட்டப்பட்டு வளர்ச்சி அடைந்து வரும் பகுதியாக உள்ளது. மேலும் குப்பைகளை கணபதிபுரம் குப்பை மாற்று நிலையத்தில் குப்பைகளை டாரஸ் லாரிகளில் ஏற்றி விடவும் சமன் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி ஒரு பொக்லைன் இயந்திரம் ஒப்பந்தபுள்ளி கோரி உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம். அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4.50/– இலட்சம் மதிப்பீட்டுக்கு மாமன்ற அனுமதி பெற்று உரிய நடவடிக்கைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. அதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்.
3. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி, அனுமதியை எதிர்நோக்கி மண்டல தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி பெற மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**.1934/2022/ **எச்**1